# <u>பத்மனாபபுரம் நகராட்சி</u>

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2021–ம் வருடம் செப்டம்பர் மாதம் 29–ம் தேதி காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## <u>பொருட்கள்</u>

1)பத்மனாபபுரம் நகராட்சி தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998–ன் படி கன்னியாகுமரி மாவட்டம் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் வாயிலாக வாரம் தோறும் வியாழக்கிழமை அன்று மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் அச்சடிக்கப்பட்ட வகைக்கு பத்மனாபபுரம் நகராட்சி பங்கீட்டுத் தொகை ரூ.7000/– (ரூபாய் ஏழாயிரம் மட்டும்) FRAN PRINTING PRESS NAGERCOIL வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:– மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். இ1/909/2021)

<u>நகர் மன்றத் தீர்மானம் எண்.1818</u>

அனுமதிக்கப்படுகிறது.

2)இந்நகராட்சியில் சட்டப்படியான வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் உள்ள கட்டிடங்களில் கழிவறைகள் மற்றும் நச்சுத் தொட்டிகள் கட்டுதல் பராமரித்தல் மற்றும் இவற்றில் இருந்து பெறப்படும் கசடு கழிவுகளை சேகரித்து அகற்ற கசடு கழிவு மேலாண்மை உபவிதிகள் அறிவிப்பு ஆலோசனை மற்றும் கருத்துக்களை தெரிவிக்க செய்தி நாளில் விளம்பரம் செய்த வகைக்கு செலவுத் தொகை ரூ.5481/– (பி) லிமிடெட் அவர்களுக்கு தொகை வழங்க மன்ற ஆணை வேண்டப்படுகிறது.

(ந.க.எண். இ1/120/2019)

<u>நகர் மன்றத் தீர்மானம் எண்.1819</u>

அனுமதிக்கப்படுகிறது.

3)இந்நகராட்சியில் அடிப்படை வசதி மற்றும் அபிவிருத்தி பணிகள் தொலை நோக்கு திட்டத்தின் கீழ் நகர் பகுதியில் உள்ள விளையாட்டுத் திடல் பூங்கா மேம்படுத்துதல் உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 5.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். இ1/909/2021)

அ.கு:– அனுமதிக்கலாம்.

<u>நகர் மன்றத் தீர்மானம் எண்.1820</u>

அனுமதிக்கப்படுகிறது.

4)பத்மனாபபுரம் நகராட்சிக்கு சட்டப்படியான வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் உள்ள கட்டிடங்களில் கழிவறைகள் மற்றும் நச்சுத் தொட்டிகள் கட்டுதல் பராமரித்தல் மற்றும் இவற்றில் இருந்து பெறப்படும் கசடு கழிவுகளை சேகரித்து அதை அகற்ற உபவிதிகள் 2019 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகளின்படி நடைபடுத்த பொது மக்கள் அறியும் வண்ணம் தினசரி நாளிதழில் பிரசுரம் செய்து தகுந்த கால அவகாசம் கொடுத்தும் எந்தவிதமான ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகளும் தெரிவிக்காததால் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய உபவிதிகள் மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்வதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ. 1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:– அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ1/120/2019)

<u>நகர் மன்றத் தீர்மானம் எண்.1821</u>

அனுமதிக்கப்படுகிறது.

5)பத்மனாபபுரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் எண். TN75Z9748 க்கு சில பழுது பணிகள் மேற்கொள்ள பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் (ம) கோவிட்-19 தடுப்பு முன்னெச்சரிக்கை 15-ன்கீழ் மேற்கொண்டமைக்கும் மேலும் உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று குறைவான விலைப்புள்ளி அளித்த அக்ஷயா மோட்டார்ஸ் உண்ணாமலை நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியமைக்கும் அதற்கான செலவினம் ரூ.17228/- வழங்கவும் மன்றத்தின் பார்வைக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு- அவசர அவசியம் கருதி பிரிவு 15-ன் கீழ் பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்

<u>நகர் மன்றத் தீர்மானம் எண்.1822</u>

அனுமதிக்கப்படுகிறது.

6)இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் எண். TN 75 B4577 வாகனத்துக்கு பழுது பணிகள் மேற்கொள்ள பொது சுகாதார பிரிவு அவசியம் மற்றும் கோவிட்-19 தடுப்பு நடவடிக்கை

மேற்கொள்ள அவசர அவசியம் கருதி பிரிவு 15-ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு விநியோக உத்தரவு வழங்கி பணி பார்த்தமைக்கும் மேலும் அதற்குண்டாகும் செலவுத் தொகை ரூ. 40120/-னை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு- பொது சுகாதார பிரிவு அவசியம் கருதி 15-ன் கீழ் பணி மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>நகர் மன்றத் தீர்மானம் எண்.1823</u>**

அனுமதிக்கப்படுகிறது.

7)~இந்நகராட்சியில் சிறப்பு சாலைத் திட்டம் 2020-2021-ம் ஆண்டிற்கு உத்தேச மதிப்பீடு தொகை சிப்பம் 1-க்கான ரூ.1.30 கோடியும் சிப்பம் 2-க்கான ரூ.1.70 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ. 3.00 கோடி செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். சி1/120/2021)

**<u>நகர் மன்றத் தீர்மானம் எண்.1824</u>**

அனுமதிக்கப்படுகிறது.

8)இந்நகராட்சியில் மருந்துக் கோட்டை உரக்கிடங்கு பகுதியில் நவீன திரவ எரிவாயு (Liquefied Petroleum Gas Crematurium)தகன மேடை அமைக்க 2021–2022 ஆண்டிற்கு 150.00 லட்சம் செலவில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். இ1/1110/2021)

அ.கு:– அனுமதிக்கலாம்.

**<u>நகர் மன்றத் தீர்மானம் எண்.1825</u>**

அனுமதிக்கப்படுகிறது.

9)கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் வாராந்திர ஆய்வுக் கூட்ட அறிவுரைப்படி, பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில் உருவாகும் திடக்கழிவுகளை உலர்ந்த கழிவுகள் மற்றும் ஈரக் கழிவுகள் என வீட்டிலேயே பிரித்து, உலர்க் கழிவுகளை (பேப்பர், அட்டை, கண்ணாடி, பாட்டில் பிளாஸ்டிக், ரப்பர், துணி இன்னும் பிற) நகராட்சிப் பணியாளர்களிடமும், ஈரக் கழிவுகளை (காய்கறி கழிவுகள், பழம், பூ மற்றம் மட்கக் கூடிய கழிவுகள்) அவரவர் வீட்டிலேயே உரமாக்கும் முறையினை நடைமுறைப்படுத்த தெரிவிக்கப்பட்டது.

திடக்கழிவு மேலாண்மை துணை விதிகளினை முழுமையாக கடை பிடித்து உள்ளாட்சி நிர்வாகத்திற்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது இன்றியமையாதது என்பதனைக் கருத்திற் கொண்டு, பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வீடுகளிலும் வீடுகளில் உருவாகும் மேற்படி மட்கும் கழிவுகளை வீட்டிலேயே உரமாக்க உரிய ஆலோசனைகள் மற்றும் மேற்படியான நடவடிக்கைகளை நகராட்சி மூலம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:– பொது சுகாதார பணிகளின் அத்தியாவசியம் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றின் முக்கியத்துவம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.320/2017/அ2)

<u>நகர் மன்றத் தீர்மானம் எண்.1826</u>

அனுமதிக்கப்படுகிறது.

ஒப்பம்/-

தனி அலுவலர் (ம) ஆணையாளர்

பத்மனாபபுரம் நகராட்சி.